# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை:திரு. செ. தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 03 / 2021**

திரு. ப. முருகன்,
2/3, வடக்குத் தெரு,
இராயப்பாபுரம், கீழநீலிதநல்லூர் (அஞ்சல்),
திருவேங்கடம் வட்டம்,
தென்காசி மாவட்டம் – 627 953. . . . மேல்முறையீட்டாளர்
(Rep by திரு.B. செந்தில்குமார், வழக்கறிஞர்)

எதிர்

1. மேற்பார்வை பொறியாளர்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மகாராஜா நகர், திருநெல்வேலி – 627 011.

2. செயற்பொறியாளர்/விநியோகம்/சங்கரன்கோவில்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
O/o. செயற்பொறியாளர்,சங்கரன்கோவில் – 627 756.

3. உதவி செயற்பொறியாளர்/ விநியோகம்/கலிங்கப்பட்டி,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
O/o. உதவி செயற்பொறியாளர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கலிங்கப்பட்டி – 627 719.

4. உதவி மின்பொறியாளர்/ விநியோகம்/குருவிகுளம்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
O/o. உதவி மின்பொறியாளர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
குருவிகுளம் – 627 754. . . . எதிர்மனுதாரர்கள்

(திரு.K.நடராஜன், செயற்பொறியாளர்/விநியோகம்/சங்கரன்கோவில்
திரு.A. மாரியப்பன்,உதவி செயற்பொறியாளர்/ விநியோகம்/கலிங்கப்பட்டி)

<u>மனு பெறப்பட்ட நாள்: 28.12.2020</u>

<u>கேட்புரை நாள்: 10–02–2021</u>

<u>ஆணை நாள் : 26–07–2021</u>

28.12.2020 அன்று பெறப்பட்ட திரு. ப. முருகன், 2/3, வடக்குத் தெரு, இராயப்பாபுரம், கீழநீலிதநல்லூர் (அஞ்சல்), திருவேங்கடம் வட்டம், தென்காசி மாவட்டம் – 627953 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண்03/2021ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 10.02.2021 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

<u>ஆணை</u>

**1.0 <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

மேல்முறையீட்டாளர் தனக்கு உட்பட்ட சர்வே எண் 261/2B–ல் உள்ள கிணற்றுக்கு இலவச விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்துள்ளார்.

**2.0 <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 மேல்முறையீட்டாளர் தென்காசி மாவட்டம், மகேந்திரவாடி வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட சர்வே எண் 261/2B–ல் அமைந்துள்ள கிணற்றுக்கு இலவச விவசாய மின் இணைப்பு கோரி தனது தாத்தா அவர்கள் 1995–ம் ஆண்டு விண்ணப்பித்ததாகவும் 2010–ம் ஆண்டு மூதுரிமைப்படி இலவச மின்சார இணைப்பு வழங்க அரசு ஒதுக்கீடு செய்தும் வாரிசு உரிமையான தனக்கு கிடைக்காததால் செயற்பொறியாளர்/சங்கரன்கோவில் அவர்களுக்கு மனு சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

2.2 செயற்பொறியாளர்/சங்கரன்கோவில் அவர்கள் தனது மனுவில் உள்ள கருப்பொருள் மீது எந்தவித கூர்ந்தாய்வும், பரிசீலனையும் செய்யாமல் மனுவினை நிராகரித்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே தனது கிணற்றுக்கு இலவச விவசாய மின் இணைப்பு வேண்டி மேற்பார்வை பொறியாளர், திருநெல்வேலி மின் பகிர்மான வட்டத்தில் **01.09.2020**அன்று மனு சமர்ப்பித்துள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருநெல்வேலிமின்பகிர்மான வட்டம்**21.11.2020** அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 <u>மன்றத்தின் தீர்வு</u> –

திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை **21.11.2020** நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றம் மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் ஆகிய இருவாதங்களையும் ஆராய்ந்ததில் மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களை ஆராய்ந்ததிலும் திரு. பூ. தனுஷ்கோடி கோனார் என்பவர் தனது விவசாய நிலமான சர்வே எண். **261/2**B மகேந்திரவாடி கிராமத்தில் உள்ள கிணற்றிற்கு இலவச விவசாய மின்னிணைப்பு வேண்டி **147/95–96** என்ற பதிவின் படி விண்ணப்பம் பதிவு செய்துள்ளார். அன்னார் **2003–ல்** காலமாகி விட்டார். மேலும் **2003–ல்** விவசாய மின்னிணைப்பிற்கு தயார்நிலை பதிவு செய்ய திரு.பூ.தனுஷ்கோடி கோனார் காலமாகி விட்டபடியால் **03–11–2010–ல்** அனுப்பப்பட்ட தயார்நிலை நோட்டீஸ் மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்கள் அடிப்படையில் மனுதாரருக்கு பட்டுவாடா செய்யப்படவில்லை என்று தெரியவருகிறது. அவருக்கு வாரிசு சான்றின்படி*

1. *திருமதி. ராமத்தாள் (இறப்பு)* *மனைவி*
2. *திருமதி. வள்ளியம்மாள்* *மகள்*
3. *திருமதி உடையம்மாள் (இறப்பு)* *தாய் ஆகிய வாரிசுகள் உள்ளனர்.*

*இதில் திருமதி வள்ளியம்மாள் அவரது கணவர் திரு.பரமசிவக் கோனார் (இறப்பு) ஆகியோருக்கு **5** பிள்ளைகள்*

1. *சண்முகையா (இறப்பு)* *மகன்*
2. *சண்முகத்தாய்* *மகள்*
3. *முருகன்* *மகன்*
4. *செல்லத்துரை* *மகன்*
5. *அய்யனுச்சாமி* *மகன்*

*மேற்படி திரு. பூ. தனுஷ்கோடி கோனார் பாத்தியப்பட்ட சர்வே எண்.**261/2**B என்ற சர்வே எண் நிலம் உட்பட சில நிலங்களை திருமதி வள்ளியம்மாள் மற்றும் திரு. பரமசிவக்கோனார் வாரிசுகள் பாகப்பிரிவினை செய்து ஆவண எண் **1759/18** என்ற ஆவணத்தின் மூலம் பதிவு செய்துள்ளார். இதில் மனுதாரருக்கு சர்வே எண் **261/2**B உள்ள ஹெக்டர் **0.02.0–ல்** உள்ள கிணற்றில் **9–ல்** ஒரு பங்கு பாத்தியப்பட்டுள்ளது. இதன்படி பார்க்கையில் விவசாய மின்னிணைப்பு வேண்டி விண்ணப்பித்த சர்வே எண் **261/2**B நிலமானது மனுதாரர் உட்பட **5** நபர்களுக்கு கூட்டு பட்டாவாக உள்ளது தெரிகிறது.*

*எனவே தயார்நிலை பதிவு செய்து நோட்டீஸ் வழங்கப்பட்ட **2010**க்குபின் பாகப்பிரிவினை ஆவணம் பதிவு செய்த **2018** வரை மனுதாரருக்கு வாரிசு உரிமைக்கான ஆவணங்கள் இல்லாததால் அன்னாரால் வாரிசு உரிமைப்படி மின்னிணைப்பு பெற முன்வரவில்லை என்பது தெரிகிறது.*

*எனவே **2010**–ல் தயார்நிலை நோட்டீஸ் தேதியிலிருந்து **5** வருடம் **90** நாட்கள் கால அவகாசம் **02–02–2016**–ல் முடிவடைந்து விட்டபடியால் அந்த தேதி வரை மனுதாரர் மேற்படி விவசாய மின்னிணைப்பிற்கான கிணற்றிற்கு உரிமை உள்ளவர் என்பதற்கான ஆவணங்களும் அவரிடம் இல்லை. **2018**–ம் ஆண்டிற்கு பிறகே பாகப்பிரிவினை மூலம் தனக்கு **9**–ல் ஒரு பங்கு பாத்தியப்பட்டதாக கூறி மேற்படி விவசாய பதிவினை தனது பெயருக்கு மாற்றி வழங்க கோருவது ஏற்புடையதாக இல்லை. எனவே மனுதாரரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.*

***<u>முடிவுரை</u> :***

*மன்றத்தீர்வின்படி திரு.பூ.தனுஷ்கோடி கோனார், அவர்கள் விவசாய மின்னிணைப்பு வேண்டி பதிவு செய்த விண்ணப்பத்தினை **02–02–2016** வரை தயார்நிலை பதிவு செய்ய கால அவகாசம் இருந்தும் மின்னிணைப்பு பெற முன்வராமல் **2018** ஆண்டில் தான் பாகப்பிரிவினை மூலம் மேற்படி கிணற்றிற்கான உரிமையை பெற்று அதன் பின்பு மனுதாரர் தனது தாத்தா பதிவு செய்த விவசாய மின்னிணைப்பு விண்ணப்பத்திற்கான உரிமையை கோருவது என்பது ஏற்புடையதல்ல என முடிவு செய்து கோரிக்கை நிராகரிக்கப்பட்டு தீர்வு செய்யப்படுகிறது."*

## 4.0 மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:

**4.1** மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக **03.02.2021**அன்று காணொளி மூலம்கேட்புரை நடத்தப்பட்டது.

**4.2** மேல்முறையீட்டாளர் சார்பாக திரு.B. செந்தில்குமார், வழக்கறிஞர் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

**4.3** எதிர்மனுதாரர்கள் திரு.K. நடராஜன், செயற்பொறியாளர் /விநியோகம் /சங்கரன்கோவில் மற்றும் திரு.A. மாரியப்பன், உதவி செயற்பொறியாளர்/ விநியோகம்/கலிங்கப்பட்டி, திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

**4.4** மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின் குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:</u>**

**5.1** மேல்முறையீட்டாளர் தென்காசி மாவட்டம், திருவேங்கடம் வட்டம், மகேந்திரவாடி வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட சர்வே எண்.**261**/2B-ல் அமைந்துள்ள கிணற்றிற்கு விவசாய இலவச மின்சார இணைப்புக்கோரி **1995–**ம் ஆண்டு தனது தாத்தா திரு.பூ.தனுஷ்கோடிகோனார் விண்ணப்பித்ததாகவும் **2010–**ம் ஆண்டு மூதுரிமைப்படி இலவச மின்சார இணைப்பு வழங்க அரசு ஒதுக்கீடு செய்ததாகவும், ஆனால் அன்றைய தேதியில் தனது தாத்தா இறந்து விட்டபடியால் அவருடைய விண்ணப்பம் குறித்து அறிய இயலவில்லை என தெரிவித்துள்ளார்.**2019–**வருடம் டிசம்பர் மாதம் தங்களது வீட்டின் பழைய இரும்பு பெட்டியில் தனது தாத்தா மகேந்திரவாடி கிராம நிர்வாக அலுவலரிடம் இலவச விவசாய மின்இணைப்பிற்கு கையெழுத்துப்பெற்ற விண்ணப்பத்தின் நகலினை பார்த்தவுடன்தான் தனது தாத்தாவும் **1995–**ம் வருடம் விவசாய மின் இணைப்பிற்கு விண்ணப்பித்த விஷயத்தை அறிந்து கொண்டதாகவும் அதன்பின் குருவிகுளம் பிரிவு அலுவலகத்திலும், சங்கரன்கோவில் செயற்பொறியாளர் அலுவலகத்திலும் நேரில் சென்று விசாரித்ததாகவும் ஆனால் தனது தாத்தா விண்ணப்பம் பதியவில்லை என்று கூறியதாகவும் மேலும் VAO கையெழுத்திட்ட விண்ணப்பத்தின் நகலினை காண்பித்து மேற்கண்ட அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களிடம் பலமுறை கேட்டும் பதில் ஒன்றும் தரவில்லை எனவும்மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**5.2** செயற்பொறியாளர்/விநியோகம்/சங்கரன்கோயில் அலுவலகத்தில் தனது தாத்தா திரு.பூ.தனுஷ்கோடிகோனார் அவர்கள் மகேந்திரவாடி வருவாய் கிராம சர்வே **261**/2B-க்கு, **29.12.1995–**ம் ஆண்டு சமர்ப்பித்த மனுவின் தற்போதைய நிலை குறித்து **18.05.2020** அன்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அடிப்படையில் கேட்ட பொழுதுதான் தனது தாத்தா திரு.பூ.தனுஷ்கோடிகோனார் பெயருக்கு இலவச மின்சார இணைப்பு வழங்குவதற்கு **03.11.2010–**ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டு அனுப்புவதற்காக வைத்திருந்த தயார்நிலை பதிவு செய்ய வேண்டிய நோட்டீஸின் நகலினை செயற்பொறியாளர்/ சங்கரன்கோவில் அலுவலகத்திடமிருந்து **29.05.2020** அன்று நேரில் சென்று பெற்றதாகவும் அப்பொழுதுதான் தனது தாத்தா விவசாயத்திற்கு இலவச மின்சார இணைப்பிற்கு விண்ணப்பித்து அரசு ஒதுக்கீடு செய்தும், அந்த நோட்டீஸ் தங்களுக்கு சார்பு செய்யப்படாத விஷயத்தை முதன்முதலாக அறிந்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 தனது தாத்தா திரு.பூ.தனுஷ்கோடிகோனார் 29.12.1995 இலவச விவசாய மின்இணைப்புக்கு விண்ணப்பித்ததை, கூர்ந்தாய்வு செய்து விண்ணப்பம் அனைத்து வகையிலும் சரியாக இருந்து அதனை ஏற்றுக்கொண்டபின் விண்ணப்பத்தை பதிந்து ரூ.50 ரூபாய் செலுத்தியதற்கான பதிவு நம்பர் மற்றும் தேதியுடன் செயற்பொறியாளர் அலுவலக முத்திரை அடங்கிய அடிப்படை ஒப்புகைச்சீட்டைக்கூட செயற்பொறியாளர்/ விநியோகம்/ சங்கரன்கோயில் அலுவலகத்தால் சுமார் 25 வருடங்களாகியும் கூட இதுவரை வழங்கப்படவில்லை என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 தாக்கீது தனக்கு உரியவழி முறையில் நிர்வாகத்தால் தெரியப்படுத்தவில்லை என்றும் அதற்கு நிர்வாகம் தான் பொறுப்பு என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். மேலும், மேற்கண்ட Notice-யை சங்கரன் கோவில் செயற்பொறியாளர் / குருவிகுளம் உதவிப்பொறியாளர் அலுவலகத்தில் இருந்து தனக்கு சார்வு செய்யப்படவில்லை என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மேற்கண்ட மின்சார இணைப்பு வேண்டாம் என்று மேல்முறையீட்டாளர் கையெழுத்து போடவில்லை என்றும் மேற்கண்ட சூழ்நிலையில் மேற்கண்ட Notice-யை பெறப்பட்ட நாளிலிருந்து 5 வருடத்திற்குள் தனது தாத்தா விண்ணப்பித்த விண்ணப்பம் 02.12.2015 அன்றைய தினத்திற்குள் காலவதியாகும் என்று தனக்கு எப்படித் தெரியும், தெரியவும் வாய்ப்பு இல்லை என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மேற்கண்ட நோட்டீஸை உரிய வழிமுறையில் அனுப்பி வைத்து, தங்களது கையில் கிடைத்திருந்தால் சங்கரன் கோவில் செயற்பொறியாளர் அலுவலக கடித எண்.செ.பொ/பகிர் /ச.கோவில்/தொநுஉ/கோ.விவ/ஆ.எண்./10, நாள் 03.11.2010 பத்தி 3–ல் தெரிவித்துள்ளவாறு விண்ணப்பதாரர் திரு.பூ.தனுஷ்கோடிகோனார் (இறப்பு) பெயருக்கு பதில், வாரிசுரிமைப்படி, உரிய வருவாய் ஆவணங்களுடன் உதவிப் பொறியாளர், குருவிகுளம் அலுவலகத்தில், தனது பெயரினை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கக்கூடும் என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 மேற்கண்ட விலாசத்தில்தான் 1995–ம் ஆண்டில் இருந்து தாங்கள் இதுவரை, தொடர்ந்து 25 ஆண்டுகளாக வசித்துக் வருவதாகவும், அப்படி இருக்கையில் அந்த நோட்டீஸை விண்ணப்பதாரரின் ஒரே வாரிசான தனது அம்மா வள்ளியம்மாள் அவர்களிடமோ அல்லது தன்னிடமோ கொடுத்திருக்கலாம். தங்களிடம் நோட்டீஸை

கொடுத்து கையெழுத்து வாங்கியிருக்கலாம். மேலும் சம்பந்தப்பட்ட நோட்டீஸை உரிய வழிமுறையாக, அரசு திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட சிறு விவசாயிக்கு தகவலை சரியான முறையில் தெரிவிக்காதது மற்றும் எந்த நடைமுறையையும் பின்பற்றாதது தவறான நிர்வாக காரணம் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 ஒரு விண்ணப்பதாரரின் 90 நாள் நோட்டீசினை உரியவரிடமோ (அ) அவரது வாரிசிடமோ அரசு திட்டத்தில் சீனியாரிட்டி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஏழை விவசாயிக்கு அதற்குரிய திட்டப் பலனை சேர்க்காமல், அதற்கென சில வழிமுறைகளை உயர்மட்ட அதிகாரிகள் தெளிவான சட்ட விதியைக் குறிப்பிட்டு தெரிவித்திருந்தும் சங்கரன்கோவில் செயற்பொறியாளர் (விநியோகம்) அலுவலக அதிகாரிகள், குருவிகுளம் பிரிவு அலுவலக அதிகாரிகள் அதை செயல்படுத்தாமல் தங்கள் குடும்பத்தினரை தண்டித்துவிட்டவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 தனது தாத்தாவின் விண்ணப்ப 90 நாள் நோட்டீசினை பதிவு தபாலில் அவர் பெயருக்கே அனுப்பியிருக்க வேண்டும். அவர் இறந்துவிட்ட நிலையில் அஞ்சலக துறையினரால் அது அனுப்பிய விலாசதாரருக்கே திருப்பப்பட்டிருக்க வேண்டும். பின்னர் அதை அனுப்பி சங்கரன்கோவில் செயற்பொறியாளர் (விநியோகம்) அவர்கள் 90 நாள் நோட்டீஸை குருவிகுளம் உதவிப்பொறியாளர் அலுவலகம் மூலம் திரு.பூ.தனுஷ்கோடிகோனார் வாரிசாகிய தனது அம்மாள் வள்ளியம்மாளிடமோ அல்லது தன்னிடமோ சேர்த்து தங்களது கையொப்பம் பெற்றிருக்க வேண்டும். மேற்படி 90 நாள் அறிக்கையினை உதவிப்பொறியாளர், குருவிக்குளம் பிரிவு அலுவலக அறிவிப்புப் பலகையில் பொதுமக்கள் பார்வைக்கு 30 நாட்கள் ஒட்டப்பட வேண்டும். அதன் பின்னரும் விண்ணப்பதாரர் மேற்கண்ட நோட்டீஸை பெறவில்லை என்றால் பின்னர் சம்பந்தப்பட்ட விண்ணப்பத்தின் அடுத்தக்கட்ட சட்டப்பூர்வமான நிலையை (Legal status) குறிப்பிட்டு செயற்பொறியாளருக்கு உரிய முறையில் தெரிவித்திருக்க வேண்டும். ஆனால் மேற்கண்ட இருமுறைகளில் எதிலும் தனது தாத்தாவின் 90 நாள் அறிக்கையை மேற்கண்ட இரு அலுவலகத்திலும் சேர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 சங்கரன்கோவில் செயற்பொறியாளரால் திரும்ப பெறப்பட்ட 90 நாள் கடிதம் சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலகங்களில் உள்ள களப்பணியாளர் மூலம் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரின் சான்று பெற்று உரிய வாரிசுதாரரிடம் ஒப்படைக்கப்படுவது

தமிழ்நாடுமின்சார வாரிய அலுவலக நடைமுறையில் உள்ளதாகவும் மேற்கண்ட நடைமுறையில் உள்ள விதியை நன்றாக தெரிந்திருந்தும் சங்கரன்கோவில் செயற்பொறியாளர் திரும்பிவந்த நோட்டீஸை திரும்ப அனுப்ப நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், குருவிகுளம் பிரிவு அலுவலகத்தில், மகேந்திரவாடி கிராம நிர்வாக அதிகாரி மூலம் சம்பந்தப்பட்ட வாரிசிடமோ அல்லது அன்னார் இறுதியாக வசித்து வந்த மேற்கண்ட விலாசத்தில் உள்ள வீட்டின் கதவில் ஒட்டி, அதன் நகல் எடுத்து, குருவிகுளம் பிரிவு அலுவலர் மூலம் சங்கரன்கோவில் செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 தனது தாத்தா விண்ணப்பித்த விவசாய இணைப்பிற்கு அன்னாரின் வாரிசான தனக்கு 90 நாட்கள் நோட்டீஸ் அனுப்பாமல் அவருடைய விண்ணப்பம் காலாவதியாகிவிட்டது என்ற வாதம் தவறு என்றும் மேலும் விண்ணபத்திற்கு 90 நாள் நோட்டீஸின் நகல் கொடுக்கப்பட்டது 29.05.2020 அன்றுதான் என்றும், எனவே அந்த நாளிலிருந்துதான் 5 வருடம் காலக்கெடு கணக்கிடப்பட வேண்டும் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.12 மேலும், சங்கரன்கோவில் செயற்பொறியாளர் விநியோகம் அவர்களின் கடித நாள் 29.05.2020 மற்றும் 19.06.2020 நாளிட்ட கடிதங்களில் திரு.பூ.தனுஷ்கோடிகோனார் அவர்களுக்கு இலவச மின்சார இணைப்பு வழங்க தயார் நிலை பதிவு செய்ய 3.11.2010 அன்று குருவிகுளம் பிரிவு அலுவலகம் மூலம் நோட்டீஸ் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்கண்ட நபர் இறந்து விட்டபடியால் மேற்கண்ட நபரால் தாக்கீது பெறப்படவில்லை என்றும் மேற்கண்ட நபருக்கு வழங்க இயலாததால் அனுப்பி வைக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தாக்கீது 90 நாள் நோட்டீஸ் மீண்டும் சங்கரன்கோவில் செயற்பொறியாளர் அலுவலகத்திற்கே திரும்ப பெறப்பட்டது என்றும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதால் சங்கரன்கோவில் செயற்பொறியாளர் அவர்கள் மேற்கண்ட விவசாய விண்ணபத்தின் அடுத்த கட்ட சட்டபூர்வமான நிலையை (Legal Status) எடுக்காமலும் தலைமைப் பொறியாளர் திட்டமிடல் அவர்களின் கடித நாள் 22.09.2019 பத்தி 2–இன் படி விண்ணபத்தினை இதுவரை ரத்து செய்யாமலும் இருப்பதால் தற்போது வரை மேற்கண்ட விண்ணப்பம் நிலுவையிலே (Live) உள்ளதாக கருதப்பட வேண்டும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.13 ஒரு விவசாய விண்ணபத்தை ரத்துசெய்வதற்கான காலக்கெடு என்பது தயார்நிலை அறிவிப்பு 90 நாள் நோட்டீஸை விண்ணப்பதாரருக்கு கையில் வழங்கப்பட்ட பின்புதான்

கணக்கிடப்பட வேண்டும் என்றும், சங்கரன்கோவில் செயற்பொறியாளர் (விநியோகம்) அவர்களின் கவனக்குறைவால் தயார்நிலை அறிவிப்பு நோட்டீஸை விண்ணப்பதாரருக்கு/வாரிசுதாரருக்கு உரிய முறையில் அன்னார்களது கையில் கிடைப்பதற்கு (சார்பு செய்யப்படுவதற்கு) அனுப்ப எந்தவித நடவடிக்கை எடுக்காதது ஏற்புடையதல்ல என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.14 தனது தாத்தா 1995–ம் ஆண்டு விண்ணப்பித்த விண்ணப்பம் காலாவதி / ரத்து செய்யாமல் தொடர் மூதுரிமையில் நிலுவையில் தொடர்ந்து இன்றளவும் உயிர்ப்பு நிலையில் இருப்பதால், தலைமைப் பொறியாளர் / திட்டமிடல் அவர்களின் கடித நாள் 22.09.2019 ல் பத்தி 3–ல் உள்ளவாறு, மீண்டும் மேற்கண்ட விண்ணப்பத்தின் மீது பெறக்கூடிய மேல்முறையீட்டு மனுவின் மீது தொடர் நடவடிக்கை எடுக்க பரிசீலிக்க வேண்டும் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.15 தான் மறுபடியும் இலவச மின்சாரத்திற்கு விண்ணப்பம் அளித்து மின்சாரம் கிடைக்க 20 ஆண்டுகள் ஆகும் என்பதால் தனது மேல்மறையீட்டு மனுவினை ஏற்று இதனை ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி சங்கரன் கோவில் செயற்பொறியாளர் அலுவலக கடித எண்.செ.பொ/பகிர்/ச.கோவில்/தொநுஉ1/கோ.விவ/ஆ.உண் /2010 நாள் 03.11.2010 மூலம் தனது தாத்தா திரு.பூ.தனுஷ்கோடி கோனார் அவர்களுக்கு வேணாண்மை மோட்டார் பம்பு செட்டிற்கு இலவச மின்சார இணைப்பு தயார்நிலை பதிவு செய்ய அறிவிப்பு வழங்கிய தாக்கீதை (Notice) அதே வருட (1995-ம் ஆண்டு) மூதுரிமையாகக் கருதி, தனது பெயருக்கு வாரிசு அடிப்படையில் மாற்றம் செய்து, தனது பெயரில் மேற்கண்ட மகேந்திரவாடி கிராம புல எண்261/2Bல் உள்ள கிணற்றிற்கு விவசாய இலவச மின்சார இணைப்பு வழங்க புதியதாக தயார் நிலை பதிவுசெய்யும் நோட்டீஸ் வழங்க சங்கரன்கோவில் செயற்பொறியாளர் (விநியோகம்) அவர்களுக்கு உத்திரவு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்:</u>

6.1 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதுரையில் இலவச விவசாய மின் இணைப்பிற்கான விண்ணப்பத்துடன் பதிவுக் கட்டணம் ரூ.50/– செலுத்தியவுடன் அதனை சம்பந்தப்பட்ட பதிவேட்டில் செயற்பொறியாளர் அலுவலகத்தில் பதிவு செய்து, அதற்குரிய பதிவு எண் குறிப்பிட்டு ஒப்புகை சீட்டு விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட்டு வரப்படுகின்றது. மேல்முறையீட்டாளரின் தாத்தா திரு.பூ.தனுஷ்கோடி கோனார், இராயப்பபுரம், அவர்களின்

இலவச விவசாய மின் இணைப்பு விண்ணப்பத்தின் பேரில் ரூ.50/– பதிவுக் கட்டணம் இரசீது எண்.149306–PCB No.217946 நாள் 23.12.1995 ஆக பதிவு செய்யப்பட்டு ஒப்புகை சீட்டு செயற்பொறியாளர் / விநியோகம் / சங்கரன்கோவில் அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

6.2 மேலும் விவசாய விண்ணப்பம் கடந்த 1995ம் ஆண்டு விண்ணப்பித்தபோது மேல்முறையீட்டாளர் கூட்டுக்குடும்பமாக சுமார் 25 வயதில் தாத்தாவுடன் வசித்து வந்ததாகவும் எனவே விவசாய விண்ணப்பம் பதிவு செய்தது 2019ல் தான் தெரியவந்தது என்பது ஏற்கதக்கதல்ல என்றும் தெரிவித்துள்ளார்.மேலும் விவசாய விண்ணப்பம் செய்த சர்வே எண்.261/2B மகேந்திரவாடி வருவாய் கிராமத்தில் அமைந்துள்ள கிணற்றில் ஏற்கெனவே மேல்முறையீட்டாளரின் உறவினர் திரு.பொ.கிருஷ்ணசாமி த/பெ.திரு. பொன்னுச்சாமிகோனார் என்பவர் பெயரில் இலவச விவசாய மின் இணைப்பு எண்.60/மகேந்திரவாடி என்ற மின் இணைப்பு இயங்கி வருவதும், மேற்படி மின் இணைப்பு பம்பு செட்டில் அன்னார் பங்கு தரவில்லை என்ற காரணத்தால்தான் திரு.பூ.தனுஷ்கோடிகோனார் புதிய இலவச விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் அதே கிணற்றிற்கு செய்தார் என்பதும் மேல்முறையீட்டாளர் முற்றிலும் அறிந்த ஒன்றாகும் என தெரிவித்துள்ளார்.

6.3 விவசாய மின் இணைப்பு தயார்நிலை நோட்டீஸ் விண்ணப்பதாரர் திரு.பூ.தனுஷ்கோடிகோனார் அவர்களுக்கு உரிய வழிமுறையில் தெரியப்படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டு ஏற்புடையதல்லயென்றும், 03.11.2010 ஆம் தேதியில் வழங்கப்பட்ட இலவச விவசாய மின் இணைப்பு 30 நாள் தயார்நிலை நோட்டீஸ் குருவிகுளம் பிரிவு அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்டு அதனடிப்படையில் 98 நபர்களுக்கு இலவச விவசாய மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 தாக்கீது விண்ணப்பதாரர் / வாரிசுதாரர்களுக்கு உரிய முறையில் வழங்கவும் இல்லை மற்றும் அனுப்பவும் இல்லை என்பதை சங்கரன்கோவில் செயற்பொறியாளர் ஒத்துக்கொண்டுள்ளார் என்பது தவறான ஒன்றாகும். ஏனெனில் குருவிகுளம் பிரிவு அலுவலகத்திற்கு உட்பட்ட இலவச விவசாய மின் இணைப்பு விண்ணப்பங்களுக்கு 03.11.2010ல் அனுப்பப்பட்ட 30 நாள் தயார்நிலை நோட்டீஸ்களில் இறந்த விண்ணப்பதாரர்களின் வாரிசுகள் 12 பேர் பெயர்மாற்றம் செய்து மின் இணைப்பு பெற்றுள்ளார்கள். மேற்படி நிகழ்விலிருந்து குருவிகுளம் மின்வாரிய பிரிவு அலுவலகம் மற்றும்

சங்கரன்கோவில் செயற்பொறியாளர் அலுவலகத்தில் முறையாக தாக்கீது வழங்கப்பட்டது என்பதை இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.5** இலவச விவசாய மின் இணைப்புகள் தமிழ்நாடு முழுவதும் ஆண்டு ஒன்றிற்கு பத்தாயிரம் மின் இணைப்புகள் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் ஒவ்வொரு மின் திட்டத்திற்கும் சுமார் **500** மின் இணைப்புகள் மற்றும் ஒவ்வொரு கோட்டத்திற்கும் சுமார் **70** மின் இணைப்புகள் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு மேற்படி விண்ணப்பதாரர்களுக்கு **30** நாள் நோட்டீஸ் பதிவு தபாலில் அனுப்பப்பட்டு, மேற்படிநோட்டீஸ்கள் சார்பு செய்யப்படாமல் திரும்ப வரப்பெற்றால் உரிய பிரிவு அலுவலகம் மூலம் மேற்படி விண்ணப்பதாரர்களிடம் சார்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது வழக்கமான நடைமுறையாகும். ஆனால் **2010** ஆம் ஆண்டு தமிழ்நாடு முழுவதும் இரண்டு லட்சம் இலவச மின் இணைப்புகள் வழங்க குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு, போர்க்கால அடிப்படையில் **30** நாள் நோட்டீஸ் அனுப்ப வேண்டிய சூழ்நிலையில், சங்கரன்கோவில் கோட்டத்தில் **962** நபர்களுக்கு நோட்டீஸ் அனுப்ப வேண்டியதிருந்ததால் பிரிவு அலுவலகங்கள் மூலம் தயார்நிலை நோட்டீஸ் செயற்பொறியாளர் / சங்கரன்கோவில் அலுவலகத்தால் வழங்கப்பட்டது. குருவிகுளம் பிரிவு அலுவலகத்தால் மின் இணைப்பு தயார்நிலை **30** நாள் நோட்டீஸ் உரிய முறையில் விண்ணப்பதாரர்களுக்கு மற்றும் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்ட நிலையில் மேற்படி குருவிகுளம் பிரிவில் **98** நபர்கள் இலவச விவசாய மின் இணைப்பு பெற்றுள்ளார்கள் என்பதிலிருந்தே மின்வாரியத்தில் தயார்நிலை நோட்டீஸ் வழங்குவதில் எவ்வித பாகுபாடும் இல்லை என்பது நிரூபணமாகும் என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.6** **2010** ஆம் ஆண்டிலேயே திரு.பூ.தனுஷ்கோடிகோனார் விண்ணப்பத்திற்கு **30** நாள் தயார்நிலை நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது என அறிந்திருந்தும், அப்போதைய சூழ்நிலையில் மேற்படி விவசாய விண்ணப்பத்தினை உரிய வருவாய் ஆவணங்களுடன் பெயர் மாற்றம் பெற்று மின் இணைப்பு பெறாமல் பத்து வருடங்கள் கழித்து **2020** ஆம் ஆண்டு மின் இணைப்பு வழங்க கோருவது மின்வாரிய விதிப்படி ஏற்கதக்கதல்ல என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.7** மின்வாரியத்தில் இலவச மின் இணைப்பிற்கு தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு தயார்நிலை பதிவு செய்திட **30** நாள் நோட்டீஸ் முறையாக வழங்கப்பட்டு வரப்படுகின்றது. **2010**ம் ஆண்டு முதன் முதலாக விவசாய பம்புசெட்டுகளுக்கு

ஸ்டார் குறியீடு கொண்ட Energy Efficiency மோட்டார்கள் பொருத்த வேண்டும். மேற்படி மோட்டார்கள் கொள்முதல் செய்த விவசாய விண்ணப்பதாரர்களைத்தான் தயார்நிலை பதிவு செய்யவேண்டும் என்ற அறிவிப்பின் காரணமாக, மோட்டார் வாங்குவதற்கு அதிக செலவாகும் என்ற காரணத்தினால் தங்களின் தாத்தா பெயருக்கு மின் இணைப்பு வழங்க 30 நாள் நோட்டீஸ் வந்துள்ளதை மேற்படி பகுதியின் களப்பணியாளர் நேரில் தெரிவித்தும் மேற்படி விண்ணப்பத்தின் பேரில் உரிய வருவாய் ஆவணங்களை சமர்ப்பித்து பெயர் மாற்றம் செய்து மின் இணைப்பு பெற முன்வரவில்லை. ஏனெனில் தற்போதைய மனுதாரரான மேல்முறையீட்டாளர் 2018ம் ஆண்டில்தான் மேற்படி விவசாய மின் இணைப்பு அமைந்துள்ள கிணற்றினையும் அதனைச் சார்ந்த நிலங்களையும் ஆவண எண்.1759/2018ன் படி பாகப்பிரிவினை செய்துள்ளார்கள். மேலும் மேற்படி கிணறு அமைந்துள்ள நிலத்திற்கு 11.05.2020 அன்றுதான் பட்டா எண். 919 மூலம் பட்டா பெற்றுள்ளார்கள். மேற்படி நிகழ்விலிருந்து தங்களின் தாத்தா திரு.பூ.தனுஷ்கோடிகோனார் அவர்களது விவசாய விண்ணப்பத்திற்கு பெயர் மாற்றம் செய்து உரிய காலக்கெடுவிற்குள் மின் இணைப்பு பெற முயற்சி செய்யாமல் பட்டா பெற்ற 11.05.2020 ஆம் தேதிக்கு பின்னர் மின்வாரிய அலுவலகத்தை தொடர்பு கொண்டு முந்தைய விண்ணப்ப முன்னுரிமையின் அடிப்படையில் மின் இணைப்பு வழங்கக் கோருவது ஏற்கதக்கதல்ல என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 03.11.2010 நோட்டீஸில் தயார்நிலை பதிவு செய்தல் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பித்தல் ஆகிய விபரங்களும் தயார்நிலை பதிவு செய்திட உள்ள காலக்கெடு மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு இலவச விவசாய விண்ணப்பதாரர் இலவச விவசாய விண்ணப்பத்தின் அடிப்படையில் மின் இணைப்பு தயார்நிலை மற்றும் 5 வருட கால அவகாசம் ஆகியவற்றை செயற்பொறியாளர் அலுவலகத்திலோ அல்லது பிரிவு அலுவலகத்திலோ கேட்டு தெரிந்துகொள்ளலாம். தலைமைப்பொறியாளர், திட்டமிடல் அவர்களின் கடிதநாள் 22.09.2019 பத்தி 2ல் இலவச மின் இணைப்புக்காக பதிவு செய்து தயார்நிலை பதிவு செய்ய நோட்டீஸ் வழங்கிய 30 நாட்களுக்கு பின் 5 வருடங்கள் முடிந்த பின்பு காலாவதியாகிவிடும் என்ற உத்தரவுதான் தற்போது நடைமுறையில் உள்ளதாகவும், உரிய காலத்திற்குள் மின் இணைப்பு பெற்றுக்கொள்ள முன்வராமல் தற்போது காலாவதியான விண்ணப்பத்திற்கு முன்னுரிமை கோரமுடியாது என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு:</u>**

**7.1** இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாகத் தெரிகின்றன.

i) விவசாய விண்ணப்பங்களுக்கு தயார்நிலை பதிவு செய்வதற்கு உரிமம்தாரரின் நிலையாணை மற்றும் குறிப்பாணைகளின்படி தரப்பட்டுள்ள கால அவகாசம் எவ்வளவு **?**

ii) மேல்முறையீட்டாளரின் இலவச மின்இணைப்புக்கான கோரிக்கை ஏற்புடையதுதானா **?**

**8.0 <u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு:</u>**

**8.1** தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ள திருத்தப்பட்ட விவசாய மின்னிணைப்புகளுக்கான விதிமுறைகள் **30.12.2020** முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வழக்கைப் பொறுத்தவரை மேல்முறையீட்டாளரின் தாத்தா திரு.பூ.தனுஷ்கோடிகோனார் அவர்களால் **29.12.1995** அன்று பதிவு செய்யப்பட்ட விவசாய விண்ணப்பத்திற்கு **03.11.2010** நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தயார் நிலை அறிவுப்பு கடிதம் எதிர்மனுதாரர்களால் வழங்கப்பட்டுள்ளது. அந்த காலகட்டங்களில் விவசாய மின் இணைப்புகளை பொருத்தவரையில், தயார் நிலையை பதிவு செய்வது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார வழங்கல் விதி (Supply Code) மற்றும் பகிர்மான விதி (Distribution Code) தொகுப்பில் எதுவும் கூறப்படவில்லை. எனவே, உரிமம்தாரர் கூறிய விதிகளைத்தான் பின்பற்ற வேண்டும்.

**8.2** எதிர்மனுதாரர் விவசாய மின் இணைப்பு கேட்கும் விண்ணப்பதாரர்கள் தங்களின் மனுவின் பேரில் தயார் நிலையை பதிவு செய்ய கொடுக்கப்பட்டுள்ள **90** நாட்கள் முடிந்த **5** வருடங்கள் வரை, தயார்நிலையை பதிவு செய்யலாம் என்று தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக தலைமை பொறியாளர்/திட்டமிடல் அவர்களின் **22.9.2009** நாளிட்ட கடிதத்தை ஆராய விரும்புகிறேன்.

> *“1. In cases of delay in reporting readiness of agricultural applications even beyond the extended period of one year, extension of time may be given to the original applicant/ legal heirs, as the case may be for entering readiness upto 5 years from the date of expiry of 90 days notice period once the party has attained the normal*

*seniority. However, this should not be applicable to purchaser of the land who purchases the land after expiry of 90 days notice.*

*2. The applications which were kept pending (except court case/ dispute case after completing 5 years from the date of expiry of 90 days notice period may be cancelled and intimated to the applicant.*

*3. Cancelled applications need not be revoked.*

*4. Applicants whose applications released / readiness entered, but supply was not availed due to court case / dispute supply may be effected without any time limit, if the case is ended in favour of the applicant on priority. The receipt of this letter may be acknowledged."*

**8.3** மேற்கண்ட ஆணையினை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது ஒரு விவசாய மின் இணைப்பு வேண்டும் விண்ணப்பதாரர் தன்னுடைய தயார் நிலையை, ஏற்கனவே வழங்கப்பட்ட ஒருவருட கால அவகாச நீட்டிப்பிற்கு பின்பும் விண்ணப்பதாரர் / விண்ணப்பதாரரின் வாரிசுக்கு தங்களது தயார் நிலையை பதிவு செய்ய **90** நாட்கள் அறிவிப்பு கடிதத்தின் காலக்கெடு முடிந்த **5** வருடங்கள் வரை காலநீட்டிப்பு வழங்கலாம் என்று தெரிகிறது. மேலும் இது சாதாரண வரிசையிலுள்ள (Normal) பதிவு மூப்பின்படி வழங்கப்படும் அறிவிப்புகளுக்குத்தான் பொருந்தும். மேலும் மேற்கண்ட விதி, தயார் நிலையை பதிவு செய்யக்கோரி விடுத்த அறிவிப்பின் **90** நாட்கள் கடந்த பின்பு மேற்கண்ட நிலத்தை வாங்கியவர்களுக்கு பொருந்தாது என்றும் தெரிகிறது. மேலும் **90** நாட்கள் அறிவிப்பு கடிதம் கொடுக்கப்பட்டு **5** வருடங்கள் கழிந்த விவசாய விண்ணப்பங்கள் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் அவ்வாறு ரத்து செய்த விவரம் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் தெரிகிறது. ரத்து செய்யப்பட்ட விண்ணப்பங்கள் திரும்ப எடுத்துக்கொள்ள முடியாது என்றும் தெரிகிறது.

**8.4** மேற்கண்ட தலைமை பொறியாளர்/திட்டமிடல் அவர்களின் **22.9.2009** நாளிட்ட ஆணையின்படி விவசாய விண்ணப்பங்கள் சாதாரண வரிசையின் மூப்பு அடிப்படையில் தயார்நிலை பதிவு செய்ய கோரி கொடுக்கப்பட்ட அறிவிப்பிலுள்ள காலக்கெடுவினை **90** நாட்கள் முடிந்த நாளிலிருந்து ஐந்து வருடங்கள் வரை விண்ணப்பதாரர் அல்லது அவர்களின் வாரிசுகள் தங்கள் தயார் நிலையை பதிவு செய்து கொள்வதற்கு கால அவகாசம் வழங்க வாரிய விதிகளில் இடமுண்டு என்று தெரிகிறது.

**9.0 <u>வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு</u>**

**9.1** மேல்முறையீட்டாளர் தனது வாதத்தில் செயற்பொறியாளர்/விநியோகம்/ சங்கரன்கோவில் அவர்களின் கடித நாள் **29.05.2020** மற்றும் **19.06.2020** நாளிட்ட கடிதங்களில் திரு.பூ.தனுஷ்கோடிகோனார் அவர்களுக்கு இலவச மின்சார இணைப்பு வழங்க தயார் நிலை பதிவு செய்ய **3.11.2010** அன்று குருவிகுளம் பிரிவு அலுவலகம் மூலம் நோட்டீஸ் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்கண்ட நபர் இறந்து விட்டபடியால் அவரால் தாக்கீது பெறப்படவில்லையென்பதால் சம்பந்தப்பட்ட **90** நாள் நோட்டீஸ் மீண்டும் சங்கரன்கோவில் செயற்பொறியாளர் அலுவலகத்திற்கே திரும்ப பெறப்பட்டது என தெரிவித்துள்ளதாகவும் ஆனால் அவர் விவசாய விண்ணப்பத்தின் அடுத்த கட்ட சட்டபூர்வமான நிலையை (Legal Status) எடுக்காமலும் தலைமைப் பொறியாளர் திட்டமிடல் அவர்களின் கடித நாள் **22.09.2019** பத்தி **2–**இன் படி விண்ணப்பத்தினை இதுவரை ரத்து செய்யாமலும் இருப்பதால் தற்போது வரை மேற்கண்ட விண்ணப்பம் நிலுவையிலே (Live) உள்ளதாக கருதப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

**9.2** ஒரு விவசாய விண்ணப்பத்தை ரத்துசெய்வதற்கான காலக்கெடு என்பது தயார்நிலை அறிவிப்பு விண்ணப்பதாரருக்கு கையில் வழங்கப்பட்ட பின்புதான் கணக்கிடப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார். எனவே, தனது தாத்தா **1995–**ம் ஆண்டு விண்ணப்பித்த விண்ணப்பம் காலாவதி / ரத்து செய்யாமல் தொடர் மூதுரிமையில் நிலுவையில் தொடர்ந்து இன்றளவும் உயிர்ப்பு நிலையில் இருப்பதால், தனது மேல்மறையீட்டு மனுவினை ஏற்று இதனை ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி சங்கரன் கோவில் செயற்பொறியாளர் அலுவலக கடித நாள் **03.11.2010** மூலம் தனது தாத்தா திரு.பூ.தனுஷ்கோடி கோனார் அவர்களுக்கு இலவச மின்சார இணைப்பு தயார்நிலை பதிவு செய்ய அறிவிப்பு வழங்கிய தாக்கீதை (Notice) அதே வருட (1995-ம் ஆண்டு) மூதுரிமையாகக் கருதி, தனது பெயருக்கு வாரிசு அடிப்படையில் மாற்றம் செய்து, மகேந்திரவாடி கிராம புல எண்**261/2**Bல் உள்ள கிணற்றிற்கு விவசாய இலவச மின்சார இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**9.3** எதிர்மனுதாரர் தன்னுடைய வாதத்தில் இலவச மின் இணைப்பிற்கு தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு தயார்நிலை பதிவு செய்திட **30** நாள் நோட்டீஸ் முறையாக வழங்கப்பட்டதாகவும், **2010** ஆம் ஆண்டு தமிழ்நாடு முழுவதும் இரண்டு லட்சம் இலவச மின் இணைப்புகள் வழங்க குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு, போர்க்கால அடிப்படையில் **30** நாள் நோட்டீஸ் அனுப்ப வேண்டிய சூழ்நிலையில், சங்கரன்கோவில் கோட்டத்தில் **962** நபர்களுக்கு பிரிவு அலுவலகங்கள் மூலம் தயார்நிலை நோட்டீஸ்

செயற்பொறியாளர் / சங்கரன்கோவில் அலுவலகத்தால் வழங்கப்பட்டதாகவும், குருவிகுளம் பிரிவு அலுவலகத்தில் 30 நாள் தயார்நிலை நோட்டீஸ் உரிய முறையில் விண்ணப்பதாரர்கள் மற்றும் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு குருவிகுளம் பிரிவில் 98 நபர்கள் இலவச விவசாய மின் இணைப்பு பெற்றுள்ளார்கள் என்பதால் தயார்நிலை நோட்டீஸ் வழங்குவதில் எவ்வித பாகுபாடும் இல்லையென தெரிவித்துள்ளார்.

9.4 மேலும், மேல்முறையீட்டாளரின் தாத்தா பெயருக்கு மின் இணைப்பு வழங்க 30 நாள் நோட்டீஸ் வந்துள்ளதை குருவிகுளம் பகுதியின் களப்பணியாளர் நேரில் தெரிவித்தும் உரிய வருவாய் ஆவணங்களை சமர்ப்பித்து பெயர் மாற்றம் பெற்று மின்னிணைப்பு பெற முன்வரவில்லையென்றும், மேல்முறையீட்டாளர் 2018ம் ஆண்டில்தான் மேற்படி விவசாய மின் இணைப்பு அமைந்துள்ள கிணற்றினையும் அதனைச் சார்ந்த நிலங்களையும் ஆவண எண்.1759/2018ன் படி பாகப்பிரிவினை செய்து கிணறு அமைந்துள்ள நிலத்திற்கு 11.05.2020 அன்றுதான் பட்டா எண். 919 மூலம் பட்டா பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார். எனவே, பட்டா பெற்ற 11.05.2020 ஆம் தேதிக்கு பின்னர் மின்வாரிய அலுவலகத்தை தொடர்பு கொண்டு முந்தைய விண்ணப்ப முன்னுரிமையின் அடிப்படையில் மின் இணைப்பு வழங்கக் கோருவது ஏற்க தக்கதல்ல என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

9.5 03.11.2010 நோட்டீஸில் தயார்நிலை பதிவு செய்தல் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பித்தல் ஆகிய விபரங்களும் தயார்நிலை பதிவு செய்திட உள்ள காலக்கெடு மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், தலைமைப்பொறியாளர், திட்டமிடல் அவர்களின் கடிதநாள் 22.09.2019 பத்தி 2ல் இலவச மின் இணைப்புக்காக பதிவு செய்து தயார்நிலை பதிவு செய்ய நோட்டீஸ் வழங்கிய 30 நாட்களுக்கு பின் 5 வருடங்கள் முடிந்த பின்பு காலாவதியாகிவிடும் என்ற உத்தரவுதான் தற்போது நடைமுறையில் உள்ளதாகவும், உரிய காலத்திற்குள் மின் இணைப்பு பெற்றுக்கொள்ள முன்வராமல் தற்போது காலாவதியான விண்ணப்பத்திற்கு முன்னுரிமை கோரமுடியாது என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

9.6 என்னுடைய வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வின்படி விவசாய விண்ணப்பங்கள் சாதாரண வரிசையின் மூப்பு அடிப்படையில் தயார்நிலையில் பதிவு செய்ய கோரி கொடுக்கப்பட்ட அறிவிப்பிலுள்ள காலக்கெடுவினை 90 நாட்கள் முடிந்த நாளிலிருந்து ஐந்து வருடங்கள் வரை விண்ணப்பதாரர் அல்லது அவர்களின் வாரிசுகள் தங்கள் தயார் நிலையை பதிவு செய்து கொள்வதற்கு கால அவகாசம் வழங்க வாரிய விதிகளில் இடமுண்டு என்று தெரிகிறது. மேலும் 90 நாட்கள் அறிவிப்பு கடிதம் கொடுக்கப்பட்டு 5 வருடங்கள் கழிந்த

விவசாய விண்ணப்பங்கள் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் அவ்வாறு ரத்து செய்த விவரம் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் தெரிகிறது. ரத்து செய்யப்பட்ட விண்ணப்பங்கள் திரும்ப எடுத்துக்கொள்ள முடியாது என்றும் தெரிகிறது.

9.7 மேலும் கொடுக்கப்பட்டுள்ள ஆவணங்களின்படி சர்வே எண். 261/2B மகேந்திரவாடி கிராமத்தில் மின்னிணைப்பு கோரி பதிவு செய்த திரு. பூ. தனுஷ்கோடி கோனார் என்பவர் 2003–ல் காலமாகி விட்டார். 03–11–2010–ல் தயார்நிலை நோட்டீஸ் குருவிகுளம் அலுவலகத்தின் பணியாளரால் சார்பு செய்யப்பட்டபோது அன்னாருடைய ஒரே வாரிசு அவருடைய மகள் திருமதி. வள்ளியம்மாள் ஆவார். திரு. பூ. தனுஷ்கோடி கோனார் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.261/2B என்ற நிலம் திருமதி வள்ளியம்மாள் மற்றும் திரு. பரமசிவக்கோனார் வாரிசுகள் பாகப்பிரிவினை செய்து ஆவண எண் 1759/18 என்ற ஆவணத்தின் மூலம் பதிவு செய்துள்ளார். இந்த ஆவண பதிவிற்கு பின்பே இதில் மேல்முறையீட்டாளருக்கு சர்வே எண் 261/2B உள்ள ஹெக்டர் 0.02.0–ல் உள்ள கிணற்றில் 9–ல் ஒரு பங்கு பாத்தியப்பட்டுள்ளது. மேலும், மின்னிணைப்பு வேண்டி விண்ணப்பித்த சர்வே எண் 261/2B நிலமானது மேல்முறையீட்டாளர் உட்பட 5 நபர்களுக்கு கூட்டு பட்டாவாக உள்ளது எனவும் அறியமுடிகிறது.

9.8 03–11–2010–ல் தயார்நிலை நோட்டீஸ் குருவிகுளம் அலுவலகத்தின் பணியாளரால் சார்பு செய்யப்பட்டபோது அன்னாருடைய ஒரே வாரிசு அவருடைய மகள் திருமதி. வள்ளியம்மாள் ஆவார். 2018–ம் ஆண்டு பாகப்பிரிவினை செய்யும்வரை திரு. பூ. தனுஷ்கோடி கோனார் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.261/2B –ற்கு மேல்முறையீட்டாளரை வாரிசு ஆக கருத இயலாது. மேலும், தயார்நிலை அறிவுப்பு கடிதம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 5 வருடம் 90 நாட்கள் கால அவகாசம் 02–02–2016–ல் முடிவடையும் வரை விண்ணப்பதாரரின் வாரிசு ஆன அவருடைய மகள் திருமதி. வள்ளியம்மாள் அவர்கள் பதிவு செய்யப்பட்ட மின்னிணைப்பு விண்ணப்பத்திற்கு வாரிசு அடிப்படையில் பெயர் மாற்றம் கோரியதாகவோ அல்லது கால நீட்டிப்பு கோரியதாகவோ எந்தவொரு ஆவணமும் இல்லையென அறியப்படுகிறது. இந்தநிலையில் மேல்முறையீட்டாளர் 2018ம் ஆண்டில்தான் மேற்படி விவசாய மின் இணைப்பு கோரிய கிணற்றினையும் அதனைச் சார்ந்த நிலங்களையும் ஆவண எண்.1759/2018ன் படி பாகப்பிரிவினை செய்து 11.05.2020 ஆம் தேதி பட்டா பெற்றுள்ளார். அதன் பின்னரே அலுவலகத்தை தொடர்பு கொண்டு திரு. பூ. தனுஷ்கோடி கோனார் அவர்களின் விண்ணப்ப முன்னுரிமையின் அடிப்படையில் மின் இணைப்பு வழங்கக் கோரியுள்ளார்.

9.9 மேற்கண்ட பத்திகளின் மூலம் அறிய வருவது திரு. பூ. தனுஷ்கோடி கோனார் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.261/2B –ற்கு 03–11–2010–ல் வழங்கப்பட்ட தயார்நிலை அறிவுப்பு கடிதமானது, அறிவுப்பு வழங்கப்பட்ட 90 நாட்கள் மற்றும் 5 வருடம் கால அவகாசமான 02–02–2016 வரை கால நீட்டிப்பு கோரியோ அல்லது பெயர் மாற்றம் கோரியோ விண்ணப்பதாரரின் வாரிசு ஆன திருமதி. வள்ளியம்மாள் அவர்களிடமிருந்து எந்தவொரு கடிதமும் பெறப்படவில்லை. மேலும் திரு. பூ. தனுஷ்கோடி கோனார் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.261/2B –ற்கு பாகப்பிரிவினை செய்த பின்பே மேல்முறையீட்டாளர் வாரிசு ஆக கருதப்படுவார். அதாவது மேல்முறையீட்டாளர் வாரிசு உரிமை பெறுவதற்கு முன்பே அதாவது 02–02–2016 அன்றுடன் தயார் நிலை பதிவு செய்வதற்கான அனுமதிக்கப்பட்ட கால அளவு முடிந்து விட்டது. மேலும் குருவிகுளம் பிரிவில் 98 நபர்கள் தயார் நிலை அறிவுப்பு கடிதம் பெற்று இலவச விவசாய மின் இணைப்பு பெற்றுள்ளார்கள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

9.10 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி திரு.பூ.தனுஷ்கோடி கோனார் அவர்களின் விவசாய மின்னிணைப்பு பதிவு எண்.147/95–96 –ற்கு தயார்நிலை பதிவு செய்ய அறிவிப்பு வழங்கிய நோட்டீஸை அதே 1995 வருட மூதுரிமையாகக் கருதி, தனது பெயருக்கு வாரிசு அடிப்படையில் பெயர் மாற்றம் செய்து, மகேந்திரவாடி கிராம புல எண்261/2Bல் உள்ள கிணற்றிற்கு விவசாய மின்னிணைப்பு வழங்க புதியதாக தயார் நிலை அறிவிப்பு கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்படையதல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது. எனவே, 21.11.2020 நாளிட்ட திருநெல்வேலி மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் வழங்கிய தீர்வில் மாற்றம் ஏதும் தேவையில்லை என நான் கருதுகிறேன்.

**10.1 <u>முடிவுரை:</u>**

10.1 பத்தி 9– உள்ள தீர்வுகளின் அடிப்படையில் திரு.பூ.தனுஷ்கோடி கோனார் அவர்களின் விவசாய மின்னிணைப்பு பதிவு எண்.147/95–96 –ற்கு தயார்நிலை பதிவு செய்ய அறிவிப்பு வழங்கிய நோட்டீஸை அதே 1995 வருட மூதுரிமையாகக் கருதி, தனது பெயருக்கு வாரிசு அடிப்படையில் பெயர் மாற்றம் செய்து, மகேந்திரவாடி கிராம புல எண்261/2Bல் உள்ள கிணற்றிற்கு விவசாய மின்னிணைப்பு வழங்க புதியதாக தயார் நிலை அறிவிப்பு கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்படையதல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது. எனவே, 21.11.2020 நாளிட்ட திருநெல்வேலி மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் வழங்கிய தீர்வில் மாற்றம் ஏதும் தேவையில்லை என நான் கருதுகிறேன்.

10.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 3/2021 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு. ப. முருகன், – **BY RPAD**
2/3, வடக்குத் தெரு,
இராயப்பாபுரம், கீழநீலிதநல்லூர் (அஞ்சல்),
திருவேங்கடம் வட்டம், தென்காசி மாவட்டம் – 627 953.

2. மேற்பார்வை பொறியாளர்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மகாராஜா நகர், திருநெல்வேலி – 627 011.

3. செயற்பொறியாளர்/விநியோகம்/சங்கரன்கோவில்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
O/o. செயற்பொறியாளர், சங்கரன்கோவில் – 627 756.

4. உதவி செயற்பொறியாளர்/ விநியோகம்/கலிங்கப்பட்டி,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
O/o. உதவி செயற்பொறியாளர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கலிங்கப்பட்டி – 627 719.

5. உதவி மின்பொறியாளர்/ விநியோகம்/குருவிகுளம்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
O/o. உதவி மின்பொறியாளர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
குருவிகுளம் – 627 754.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர்,தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் – By Email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.